சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் , சென்னை-08

ந.க.எண். 8237 /ஆ5/2024, நாள்.26.11.2024

பொருள் பள்ளிக் கல்வி – பொதுத் தேர்வு- 10,11, 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு 2024-2025 ஆம் கல்வியாண்டு -தேர்வுப்பணி – தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களின் விவரம் கோருதல் – தொடர்பாக.

பார்வை சென்னை-06, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண். 01304/ எச்1/2024, நாள். 15.10.2024.

-------------------------

2024-2025 ஆம் கல்வியாண்டிற்கான இடைநிலை / மேல்நிலை முதலாம் ஆண்டு / மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான தேர்வு கால அட்டவணை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் 14.10.2024 அன்று வெளியிடப்பட்டது.

தேர்வு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு அனைத்து அரசு/ சென்னை/ ஆதிதிராவிடநல / அரசு உதவி பெறும் / ஆங்கிலோ இந்தியன்/ மெட்ரிகுலேசன் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களின் விவரங்களை இணைப்பில் உள்ள படிவங்களில் பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளியில் பணிபுரியும் முதுகலை, பட்டதாரி, இடைநிலை, உடற்கல்வி ஆசிரியர்களின் விவரங்களையும், மருத்துவ விடுப்பு மற்றும் மகப்பேறு விடுப்பில் உள்ள ஆசிரியர்களின் விவரங்களையும் படிவத்தில் சரியாக பூர்த்தி செய்திட வேண்டும். இவற்றில் ஏதேனும் தவறுகள் ஏற்படின் சார்ந்த தலைமையாசிரியர்/ முதல்வர் முழுப் பொறுப்பேற்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு.படிவம் 1, 2, 3 (Google sheet)

26/11/24

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை

25/11/2024

பெறுநர்

அனைத்துப் பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் ( சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்கள் வழியாக)

நகல்

அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் , சென்னை மாவட்டம்.